# A STUDY ON THE SATISFACTION OF HEALTH SERVICE IN THE VAVUNIYA DISTRICT

LIBRARY
25 JUN 2006
Eastern University, Sri Lanka

GANESHAMOORTHY UTHAYAKUMAAR

1022.

FCM1022
Project Report
Library - EUSL

DEPARTMENT OF MANAGEMENT
FACULTY OF COMMERCE AND MANAGEMENT
EASTERN UNIVERSITY SRILANKA.

2005.

# ஆய்வுச் சுருக்கம்.

இலங்கை ஓர் அபிவிருத்தி அடைந்து வரும் நாடாகும். ஓர் நாட்டின் அபிவிருத்திக்கு பல காரணிகள் முக்கியமானவையாக அமைகின்றன. அக்காரணிகளுள் சுகாதாரமும் முக்கிய இடத்தை வகிக்கிறது. அவ்வகையில் இலங்கையில் மக்களின் நன்மை கருதி அரசாங்கமானது இலவசமாக சுகாதார சேவையை வழங்குகிறது. இச் சேவையானது நாட்டில் பாரிய முதலீட்டுடன் மேற்கொள்ளப்படுவது குறிப்பிடத்தக்கது. இவ்வாறு பாரிய முதலீட்டுடன் மேற்கொள்ளப்படும் இச் சேவை நாட்டின் அபிவிருத்திக்கு ஏற்ற வகையில் வளர்ச்சிப் போக்கையும் , திருப்தியையும் கொண்டமைய வேண்டும்.

இதன் அடிப்படையில் இலங்கையின் சுகாதார சேவைத் திருப்தி பற்றி நோக்க வேண்டியுள்ளது. இந்த வகையில் மாவட்ட ரீதியாக வவுனியா மாவட்டத்தின் சுகாதார சேவையின் திருப்தி பற்றி இவ்வாய்வு மூலம் அறியக்கூடியதாக உள்ளது. இதற்காக இம் மாவட்டத்திலுள்ள பிரதேச செயலர் பிரிவின் அடிப்படையில் மக்களின் விதாசாரத்துக்கேற்ப எழுமாறாக நூறு பேரிடம் வினாக் கொத்துக்கள் வழங்கப்பட்டு ஆய்வுக்குத் தேவையான தரவுகள் பெறப்பட்டன. இதனைவிட இவ்வாய்வுக்குத் தேவையான மேலதிக தரவுகள் பி.மா.சு.சே பணிமனையிலும், வைத்தியசாலைகளிலும் பெறப்பட்டு ஆய்வு மேற்கொள்ளப்பட்டது.

இவ்வாய்வுக் கட்டுரை ஆறு அத்தியாயங்களைக் கொண்டமைந்துள்ளது. முதலாவது அத்தியாயமானது ஆய்வின் அறிமுகத்தையும், இரண்டாம் அத்தியாயமானது நூலாய்வையும், மூன்றாம் அத்தியாயம் பெறப்பட்ட தலவுகளிலிருந்தான தரவுப் பகுப்பாய்வையும், நான்காம் அத்தியாயமானது ஆய்வு முறைமையினையும் ஐந்தாம் அத்தியாயமானது தரவுப் பகுப்பாய்வு பற்றிய கலந்துரையாடலையும், ஆறாம் அத்தியாயமானது இவ்வாய்வின் சுகாதார சேவையின் திருப்தி பற்றிய முடிவுரைகளையும் சிபார்சுகளையும் உள்ளடக்கியுள்ளன.

இவ்வாய்வு மூலம் இச் சேவையை வழங்குவதில் இம்மாவட்டத்தில் காணப்படும் பிரச்சினைகளும் அவற்றுக்கான தீர்வுகளும் குறிப்பிடப்பட்டுள்ளன. அத்துடன் இச் சேவை விஸ்தரிக்கப்பட வேண்டிய தேவையும் உணர்த்தப்பட்டுள்ளது. அந்த வகையில் இம்மாவட்டத்தின் சுகாதார சேவையின் திருப்தி பற்றிய இவ்வாய்வின் மதிப்பீட்டிலிருந்தான முடிவுரைகளும் சிபார்சுகளும் இத்துறையில் சம்மந்தப்பட்ட அனைத்துத் தரப்பினருக்கும் பயனுள்ள ஒன்றாக அமையும். இவற்றுக்கு மேலாக இம்மாவட்ட சுகாதார சேவை மேம்படுத்தப்படுவதுடன் அது இந் நாட்டின் அபிவிருத்திக்கும் வழிசமைக்கும் என நம்புகிறேன்.

# பொருளடக்கம்


| விடயம் | | பக்க இல. |
| --- | --- | --- |
| 01) | **அறிமுகம்** | **01 - 10** |
| | பின்னணி | 01 |
| | ஆய்வின் பிரச்சினை | 03 |
| | ஆய்வின் நோக்கம் / குறிக்கோள் | 04 |
| | எண்ணக்கருவாக்கம் | 04 |
| | ஆய்வு முறைமை | 05 |
| | தரவு பகுப்பாய்வும் முன்வைத்தலும் | 09 |
| | ஆய்வின் வரையறைகள் | 10 |
| | எடுகோள்கள் | 10 |
| 02) | **நூலாய்வு** | **11 - 32** |
| | அறிமுகம் | 11 |
| | சுகாதாரமும், சுகாதார நிலைக் குறிகாட்டிகளும் | 11 |
| | சுகாதார சேவையும், அதனுடைய முக்கியத்துவமும் | 27 |
| | தொழில் திருப்தி | 29 |
| 03) | **ஆய்வு முறைமை** | **33 – 35** |
| | அறிமுகம். | 33 |
| | தரவுகள்/தகவல்களை ஆய்வு செய்தல். | 33 |
| | எண்ணக்கருவாக்கத்தை நடைமுறையாக்கல். | 35 |
| 04) | **தரவுப்பகுப்பாய்வும் மதிப்பீடும்** | **36 - 48** |
| | அறிமுகம் | 36 |
| | விகிதாசாரீதியில் கணிப்பீடும் பகுப்பாய்வும். | 36 |
| | தனிப்பட்ட விபரம் பகுப்பாய்வு | 37 |
| | சுகாதார சேவையின் திருப்தி பற்றிய பகுப்பாய்வு. | 32 |
| 05) | **கலந்துரையாடல்.** | **49- 53** |
| | அறிமுகம். | 49 |
| | தனிப்பட்ட தகவல் மீதான விதந்துரைப்பு. | 49 |
| | சுகாதார சேவையின் திருப்திபற்றிய விதந்துரைப்பு | 51 |
| | திருப்தியின்மைக்கான காரணங்கள். | 52 |
| 06) | **முடிவுரைகளும் சிபார்சுகளும்.** | **54 - 51** |
| | அறிமுகம் | 54 |
| | சிபார்சுகள் | 54 |
| | சம்மந்தப்படுத்தல்கள் | 56 |
| | தாற்பரியங்கள் | 56 |
| 07) | **உசாத்துணை நூல்கள்** | **58 – 58** |
| 08) | **பின்னிணைப்புக்கள்** | **59 - 64** |
| | வினாக்கொத்து | 59 |
| | அமைப்பு வரையடம் | 63 |